1990 சனவரி 25]

திறந்துவிடுவதில்லை. இதைக் கருத்தில் கொண்டு, வருகின்ற நடப்பு ஆண்டிலேயாவது' அங்கே உரிய காலத்திலே பயிர் நடவு செய்வதற்கு தண்ணீர் திறந்து விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, தண்ணீரை வைத்துக் கொண்டு யாரும் திறக்காமல் இருக்க மாட்டார்கள். அதிலே சில சட்ட திட்டங்கள் உண்டு. இருந்தாலும் விவசாயிகள் வாடுகிற அளவிற்கு இந்த அரசு விட்டுவிடாது.

பைத்தூர் இராமத்தில் ஏரி கட்டுதல்

*3536—திரு. ஏ. எம். இராமசாமி ;

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தில் பைத்தூர் கிராமத்தில் புதிய பெரிய ஏரி கட்டுவதற்கு 1976 ஆம் ஆண்டி லிருந்தே ஆய்வில் இருந்து வந்த செயற்குறிப்பு எந்த நிலை யில் உள்ளது?

(9–55 மணி)

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இத்திட்டம் குறித்த முதல் நிலை அறிக்கை தலைமைப் பொறி யாளர் (ஆய்வு) அவர்களுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அந்த அறிக்கை வந்தபிறகு இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. எம். இராமசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத் தில் பைத்தூர் கிராமத்தில் புதியதாக இந்த ஏரியைக் கட்டுவதினால் கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கான ஏக்கருக்கு விவசாயிகள் தண்ணீர் பாய்ச்சுவதற்கு நல்ல வசதியாக இருக்கும். அதுமட்டுமல்லாமல் அப்பகுதியிலே உள்ள கிணற்றை நம்பி வாழ்கின்ற விவசாயிகள் நிறைய இருக்கிறார் கள். அவர்களுக்குக் கிணற்றுத் தண்ணீர் வருவதற்கும் வசதி யாக இருக்கும். இதை மனதில்கொண்டு வருகின்ற நடப் பாண்டில் இந்த ஏரியைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். ஓரு ஆய்வு அறிக்கை

அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அது வந்ததற்குப் பிறகு இறுதி முடிவு எடுக்கப்படும்.

திரு. ஏ. எம். இராமசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற நடப்பாண்டில் அதைக் கட்டித் தரவேண்டுமென்று மீண்டும் அவரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

(விடை இல்லை).

மறுவாழ்வு இல்லங்கள்.

*2651—திரு. வீ. தமிழ்மணி:—

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

தமிழ்நாட்டில் உள்ள உடல் ஊனமுற்றவர், பார்வையற்றவர்கள், மனநோயாளிகளுக்குத் தனித்தனியாக மறுவாழ்வு இல்லங்கள் அமைத்து ஆதரவளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே :

தற்போது அரசின் பரிசீலனையில் அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றோர், பார்வையற்றோர், மனநோயாளிகளுக்கு ஆங்காங்கே இருக்கின்ற சத்துணவு மையங்களிலாவது மதிய உணவு வழங்கப்படுமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக நிலையங்கள் உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்று நான் சொன்னேன். ஏற்கெனவே பார்வையற்றவர்கள், காது கேளாதோர், மன வளர்ச்சி குன்றியவர்களைப் பராமரிக்கின்ற வகையில், அவர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்குகின்ற பயிற்சி நிலையங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்த நிலையங்களில் பார்வையற்ற பெண்கள், பார்வையற்ற ஆடவர்கள், உடல் ஊனமுற்ற ஆடவர்கள் போன்றவர்கள் 6 மாதம் முதல் ஓராண்டு வரை தங்கி சிறிய தொழில் பயிற்சியினைப் பெற்று அதன்மூலம் வேலை வாய்ப்பைப் பெறு